இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 06 | திகதி : 19.05.2024 | விலை : 50.00

## முதுமையில் நாம் பயனற்றவர்கள் என உணர்ந்தாலும் கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை

### உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினச்செய்தியில் திருத்தந்தை



முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும், என்ற திருப்பாடல் 71ன் வார்த்தைகளைத் தலைப்பாகக் கொண்டு இவ்வாண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி திருஅவையில் சிறப்பிக்கப்படும் தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாளுக்குச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஜூலை மாதம் திருஅவையில் சிறப்பிக்கப்பட உள்ள நான்காவது உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் நாளுக்குத் திருத்தந்தை வெளியிட்டுள்ள செய்தியில், நம் வயது அதிகரித்து, நம் பலம் குறைந்து, நம் கேசம் வெண்மையாகி, சமூகத்தில் நம் பங்கு குறைந்து, நாம் குறைவாகவே சமூகத்துக்குப் பங்களித்துள்ளோம், நாம் தேவையற்றவர்கள் எனத் தோன்றினாலும், கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை எனக் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுளின் விசுவாசம் மிக்க அன்பை எடுத்துரைக்கும் விவிலியம் நமக்கு இறைவனின் இரக்கத்தைக் காண்பித்து நமக்கு ஆறுதலைத் தருவதாக உள்ளது என அச்செய்தியில் கூறும் திருத்தந்தை, கடவுளின் அருகாமையின் உறுதியையும், கைவிடப்படுவோமோ என்ற முதியோரின் அச்சத்தையும் நாம் புனித நூலில் காண்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகள் வேறு இடங்களுக்குக் குடிபெயர வேண்டிய சூழல்களிலும், மோதல் காலங்களின்போதும், முதியோர் தனிமையில் விடப்படுவது இடம்பெறுகிறது என்ற... (2ம் பக்.)

## நெஞ்சார்ந்த நன்றிகள்

எனது பணிக்குருத்துவத்தின் பொன்விழா நன்றித் திருப்பலியில் என்னோடு இணைந்து எனக்காகச் செபித்து இறைவனுக்கு நன்றி கூறிய ஆயர்கள், குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், இறைமக்களாகிய உங்கள் ஒவ் வொருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைக் கூறி நிற்கின்றேன்.

பங்குத்திரு அவையாகவும், மறைக்கோட்ட ரீதியாகவும், வெளியூர்களிலிருந்தும் வருகை தந்து நன்றித்திருப்பலியிலும், பாராட்டு நிகழ்விலும் கலந்து கொண்ட உங்களுக்கு இறை ஆசியோடு கூடிய நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

தொடர்ந்தும் எனது பணிவாழ்வுக்காக இறைவனிடம் மன்றாடும்படி வேண்டிநிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள

**பேரருட்கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**யாழ். ஆயர்**

## மருதமடு அன்னையின் யாழ்ப்பாண மறைமாவட்ட விஜயத்தின் போது ஆதரவு நல்கிய அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

– யாழ். ஆயர்



மடுத் திருப்பதிக்கு திருயாத்திரை செய்ய வாய்ப்பின்றியிருந்த பல்லாயிரக்கணக்கான வயோதிபர்கள், நோயாளர்கள் அன்னையின் நேரடி ஆசீரைப் பெற்றமை பெரும் பாக்கியமாகும்.

இவ் வாய்ப்பினை வழங்கிய மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கும், மடுத் திருத்தல பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாருக்கும், மருதமடு அன்னையின் வருகையின் போது உடனிருந்த மன்னார் மறை மாவட்ட அருட்பணியாளர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது மறைமாவட்டத்திற்கு (2ம் பக்.)

மருதமடு அன்னையின் முடிசூட்டப்பட்ட நூற்றாண்டில் யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கு அன்னை வருகை தந்தமை வரலாற்றுச் சிறப்புமிக்க, இறைவனின் இரக்கத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாகும். மடுத் திருப்பதி

## கரித்தாஸ் நோர்வே பிரதிநிதிகளுடன் யாழ் ஆயர் சந்திப்பு



கரித்தாஸ் கியூடெக் நிறுவன நோர்வோ நாட்டுப் பிரதிநிகள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பு கடந்த 6ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## நாயாறு புனித சூசையப்பர் ஆலயத் திறப்பு விழா





அளம்பில் பங்கின் நாயாறு பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவந்த புனித சூசையப்பர் ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் புதிய ஆலயத் திறப்பு விழாவும் வருடாந்தத் திருவிழாவும் கடந்த 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

பங்குத்தந்தை அருட்தந்தை எமில் போல் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்து திருவிழாத் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். கடந்த 01ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 04ம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. நற்கருணைவிழாத் திருப்பலியை அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை பொஞ்சியன் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

புதிய ஆலயத்திற்கான அடிக்கல் முன்னைநாள் பங்குத்தந்தை அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்களால் கடந்த வருடம் ஐப்பசி மாதம் 25ம் திகதி நாட்டப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியா வோல்சிங்கம் மாதா திருத்தலத் திருவிழா



மருதமடு அன்னை யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்ட மக்களை மட்டுமல்ல, பிரித்தானியாவில் வாழும் உங்கள் வீதிகளிலும் வலம்வந்து உங்களையும் உங்கள் குடும்பங்களையும் சந்திக்கின்றாரென பிரித்தானியா வோல்சிங்கம் மாதா திருத்தலத் திருநாள் திருப்பலியில் மறையுரையாற்றிய யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தெரிவித்துள்ளார். (7ம் பக்)

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

**மே மாதம் தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத மாதம். 2009ம் ஆண்டு இறுதிப் போரில் மட்டும் 146,000 எம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பதினைந்து ஆண்டுகள் கடந்தாலும் நாம் நினைப்போம், திடுக்கிடுவோம், நினைவு-வரும் வேளையில் எல்லாம்.**

**இம்மாதத்தில் மறக்க முடியாத எம் கண்ணீர் சோக வரலாற்றை நினைவு கூரும் வேளை, இவ் அவலத்தின் அடையாளமாகவுள்ள முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுபடுத்தி, யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையை இவ்வார ஆசிரியர் தலையங்கத்தில் நோக்குவோம்:**

## உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சி

மூன்று தசாப்தங்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புப் போரின் ஒரு முக்கிய குறியீடு தான் இந்த முள்ளி வாய்க்கால் கஞ்சி. இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் குடித்து சாவிலிருந்து தப்பியவர்கள் சிலர் இன்னமும் நம் மத்தியில் வாழ்கிறார்கள். அவர்களது துயர் அனுபவம் வருங்கால சமுதாயத்தினருக்கு விளக்கிப்பகிரப்பட வேண்டியதொன்று.

அரசாங்க புள்ளி விபரங்களின்படி முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் (பாதுகாப்பு வலயம் என்று அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட) அப்போதைய அரச புள்ளி விபரத்தின்படி மிக நெருக்கமான முறையில் முற்றுகைக்குள்ளாயிருந்த மக்களின் எண்ணிக்கை 2,70,000 பேர். பல்வேறு பொருளாதாரத் தடைகளுக்குள் வாழ்ந்து கொண்டிருந்த இவர்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டளவில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ஒரு நேர உணவைப் பெறுவதே பெரும்பாடாயிருந்தது. இவர்களது எண்ணிக்கையை மறுபக்கத்தில் ஷெல் வீச்சுக்களும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களும் குறைத்துக் கொண்டிருந்தன. யுத்தம் முடிந்து, சரணடைவுகளின் பின் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்தவர்களது எண்ணிக்கை 3,70,000 ஆக இருந்தது! *(அரச தரப்பில் 270,000 பேர் மட்டுமே இருந்தனர் எனக் கூறி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உணவு அனுப்பப்பட்டாலும், உண்மையில் 370,000 பேர் அங்கு வாழ்ந்தனர் என்ற உண்மை வெளிப்படையானது)* இவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வர உதவியது இம்மக்கள் தம் உடமைகளில் வைத்திருந்த அரிசி, தேங்காய் போன்றவற்றைப் பகிர்ந்து காய்ச்சிய கஞ்சிதான். இதனால் தான் இம் முள்ளிவாய்க்கால் கஞ்சி இவர்களது உயிர் காத்த கஞ்சியாகவும் வரலாற்றுச் சிறப்புப் பெறுகின்றது.

இலங்கை வாழ் தமிழர்களின் குறிப்பாக வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் எதிர்கொண்ட மிகவும் மோசமான துன்பங்களையும் இலட்சக்கணக்கான மக்கள் காவு கொள்ளப்பட்டமையையும் நினைவு கூருவது தான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாற்றம்.

உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதைத் தடுப்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறலாகும். தற்போது பல்வேறு இடங்களில் இடம் பெற்று வரும் முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பரிமாற்ற நிகழ்வுகளை ஆட்சியாளர்கள் தடுக்க முயல்வது குறிப்பாக கிழக்கில் சம்பூர் பகுதியில் இந்நிகழ்வுகளில் பங்கெடுத்தவர்களை இரவிரவாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது மிக மோசமான மனித உரிமை மீறலாகும்.

ஒரு பக்கத்தில் இப்படியான மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுக்கொண்டு மறுபக்கத்தில் காணாமல் போனவர்கள் அலுவலகத்தின் செயற்பாடுகளையும், இனங்களுக்கான நல்லிணக்க செயற்பாடுகளை முடுக்கி விடுவது எல்லாம் வெறும் போலி நாடகமே, சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த அரங்கேற்றப்படும் நாடகங்களேயன்றி வேறில்லை.

சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty International) இலங்கையில் இடம்பெற்று வரும் சிறுபான்மையினருக்கெதிரான மனித உரிமை மீறல்களைத் துவக்கதிலிருந்தே சுட்டிக்காட்டி வருவது நாமறிந்ததே. இவ்வாரத்தில் இச்சபையின் செயலாளர் அக்னஸ் கலமார்ட் இலங்கைக்கு வந்து குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பங்கெடுப்பதை நாம் வரவேற்கின்றோம்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியேறிய/வெளியேற்றப்பட்டபின் நடுநிலை சாட்சியங்கள் இல்லாத நிலையிலேயே மக்கள் கொத்துக்கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டனர். இந்நிலையில் தான் பொது மக்களுக்குப் பாதிப்பில்லாமல் (Zero Casualty) வெற்றிகொள்ளப்பட்ட போர் என்று அரசு சொல்லிக்கொண்டிருந்தபோது மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை புள்ளி விபரங்களின்படி இறுதிப்போரில் மட்டும் 146,000 மக்களுக்குமேலாகக் கொன்றொழிக்கப்பட்டார்கள் என்ற விபரத்தை வெளிக்கொணர்ந்திருந்தார்!

இவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளைத் தடுப்பதும், கஞ்சி காய்ச்சி பரிமாறியவர்களைக் கைது செய்வதும் தடுத்து வைப்பதும் பொறுப்புக் கூறலுக்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நிலைத்த சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் பாரிய பின்னடைவாகும் என்பதை யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி

15.05.2024
இயக்குனர்
S.V.B. மங்களராஜா
..............................
யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமதான ஆணைக்குழு

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## இறைவனடி சேர்ந்தார் துணை ஆயர் மேரியஸ் பீரிஸ்



கொழும்பு உயர் மறைமாவட்ட ஓய்வுநிலைத் துணை **ஆயர் மேரியஸ் பீரிஸ் ஆண்டகை** அவர்கள் கடந்த 13.05.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

ஆயர் அவர்கள் கண்டி தேசிய குருமட அதிபராகவும், உயர் மறை மாவட்டத்தின் மறை வட்ட முதல்வராகவும், தெகிவளை உள்ளிட்ட பல பங்குத்தளங்களில் பங்குத்தந்தையாகவும் அரும்பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் ஆரோகணம் இளையோர் இல்ல இயக்குநருமாகிய அருட்பணி S. சசிதரன் அடிகளாரின் அன்புத்தந்தை **திரு முத்தையா அலோசியஸ் சிறிஸ்கந்தராஜா** அவர்கள் கடந்த 10.05.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ். மறைமாவட்டக் குருவும் வழிபாட்டு நிலைய இயக்குநரும் கரம்பன் பங்குத்தந்தையுமான அருட்பணி M.L.தயாகரன் அடிகளாரின் அன்புத்தந்தை **திரு சூசைப்பிள்ளை மரியநாயகம்** அவர்கள் கடந்த 11.05.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## மருதமடு அன்னையின்.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

மருதமடு அன்னை வருகை தந்தபோது அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்ட எமது மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாருக்கும், அவருடன் இணைந்து பணியாற்றியவர்களுக்கும், சிறப்பாகத் தகுந்த ஆன்மீக ஆயத்தங்களை மேற்கொண்டு பக்தி பூர்வமாக அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்த பங்குத்தந்தையர்கள், அருட்பணிச் சபையினர், இறைமக்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் கூறி நிற்கின்றேன்.

இறைமக்களாகிய நீங்களும் எமது சகோதர சமய மக்களும் மனநிறைவுடன் மருதமடு அன்னைக்கு வழங்கிய காணிக்கைகளுக்கும் எமது இதய நன்றிகள். சேகரிக்கப்பட்ட முழுப் பணமும் மன்னார் மறைமாவட்ட ஆயர் ஊடாக மன்னார் திருத்தலத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. மருதமடு அன்னை தொடர்ந்து எமக்காக இறைவனிடம் பரிந்துரைப்பாராக.

***(நிதிமுகாமையாளரால் வழங்கப்பட்ட, இறைமக்கள் மருதமடு அன்னைக்கு வழங்கிய காணிக்கை விபரம் பக்கம் 3 இல் காண்க)***

## முதுமையில் நாம் பயனற்றவர்கள்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தந்தை, மரணமும் அழிவும் ஆட்சி செய்யும் பல இடங்களில் முதியோர் மட்டுமே வாழ்வின் அடையாளங்களாக இருக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் முதியோர் பில்லி சூனியம் வழியாக இளையோரின் சக்திகளைப் பெறுகிறார்கள் என அவர்களுக்கும் இளையோருக்கும் இடையே ஒரு தப்பெண்ணம் நிலவி வருவதையும் குறிப்பிட்ட திருத்தந்தை, இத்தகைய முன்சார்பு எண்ணங்கள் முற்றிலுமாக ஒழித்தழிக்கப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.


முதியோர் இளையோரின் வருங்காலத்தை திருடுகிறார்கள் என்ற இதையொத்த தவறானக் குற்றச்சாட்டையும் எடுத்துரைத்த திருத்தந்தை, முதியோரைப் பராமரிப்பதற்கான செலவுகள் சமூகத்தில் அதிகரித்து வருகின்றன என்ற குற்றச்சாட்டு அகற்றப்பட்டு, அனைத்து வயதினரும் ஒன்றிணைந்து சமூகமாகப் பங்களிக்க முயல வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ஒரு மனிதனின் மீறமுடியாத மாண்புக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்காததினால்தான் நம் சமூகத்தில் முதுமையை சுமையாக நோக்கும் போக்கு அதிகரித்து வருகிறது என்பதையும் தன் செய்தியில் சுட்டிக்காட்டும் திருத்தந்தை, இன்றைய கால கட்டத்தில் நாம் என்பது மறைந்து நான் என்பது ஆதிக்கம் பெற்றுவருவதும் முதியோர் ஒதுக்கப்படுவதற்கு ஒரு காரணம் என்பதை எழுதியுள்ளார்.

உடன்பிறந்த உணர்வுநிலையை மனிதகுலம் மறந்து வருவதால் தனிமையும், கைவிடப்படலும் சாதாரண நிகழ்வுகளாக நோக்கப்படுகின்றன என்ற வருத்தத்தையும் தன் செய்தியில் வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விவிலியத்தில் நவோமி, இறந்துபோன தன் மகன்களின் மனைவிகளை அவர்களின் சொந்த நாட்டிற்குத் திரும்பும்படி பணித்ததையும், மருமகள் ரூத் தன் மாமியாருக்குக் கடைசிவரை பணிவிடை செய்ததையும் எடுத்தியம்பி நாமும் ரூத்தின் பாதையில் நடைபோடுவோம் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நான்காவது உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினத்தில் நம் தாத்தா பாட்டிகளையும் முதியோரையும் அன்பு கூர்வோம், அவர்களோடு நேரத்தைச் செலவிடுவோம் எனவும் கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## நீங்கா நினைவுகளுடன் 31ம் நாள்

| அன்னை மடியில் | | ஆண்டவர் சந்நிதியில் |
|---|---|---|
| 28.07.1949 |  | 30.04.2024 |

அமரர் **அந்தோனிப்பிள்ளை பீற்றர்** (குமார்)

"நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே! சிறிய பொறுப்புக்களில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்"

**இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக 31.05.2024 வெள்ளிக்கிழமையன்று யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், பரிசுத்த கார்மேல் மாதா ஆலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.**

"தாயகம்"
42/5, மவுண்கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவு அகலா
மனைவி, மகள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனிகள், மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்.

# தூய ஆவியார் திருத்தூதர்களை ஆட்கொண்ட நிகழ்வு



அருட்பணி. அமிர்த ஜெயசேகரம்

உலகமயமாக்கலுக்கு இது ஒரு நுழைவாயில். பல்லின, பன்முக, மொழி, பண்பாடுகளின் இருப்பைக் கொண்டாடுவதற்கு இது ஓர் அழைப்பு நாள்!. பன்மொழி, பண்பாடுகள் மனித பாவத்தினதும், குற்றத்தினதும் வெளிப்பாடு என்ற பாபேல் கோபுர சிந்தனை அடிபட்டுப் போகும் நாள் இது. உலகமயமாக்கல் சிந்தனைக்குக் கருக்கொண்ட நாள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "ஒரே வானம் ஒரே பூமி", "ஒரே காற்று ஒரே கடல்", "அனைவருக்கும் ஒரே நீதி" என்ற தமிழ் வேதத்தின் கூற்றை உறுதிப் படுத்தும் நாள். சமுதாய நீதியைப் போதிக்கும் முதல் வேதம் யூதம். இதை உலகிற்கு அறிவித்தவர்கள் யூதர்கள். இவைகளை ஆமோதிக்கும் நாள் இது. நவீன கால ஓட்டத்தில் இத்திருநாள் உலகமயமாக்கலின் வித்து என்று சொல்லாமல் சொல்லும் நாள். இது திருத்தூதர்கள், பெண்கள் கூடியிருக்கையில் பயம் அவர்களை ஆட்கொண்டு, புதுவிதமான அனு பவத்தைப் பெறக் காத்திருந்தார்கள். பாரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள வாக்குக் கொடுக்கும் நாள் அது.

இந்நாள் உலகமயமாக்கும் இயக்கமாக செயற்திட்ட வடிவெடுக்கும் கருவியாக அமைந்தது. மானுட வர்க்கம் எவ்வாறு பூர்வீகமானதோ அதேபோன்று தான் உலக மயமாக்கலும். இருப்பினும் சமகாலத்தில் உலகமயமாக்கல் அடிப்படை எண்ணக் கருவில் இருந்து பிறழ்வது நோக்கற்பாலது. வளமான வாழ்வு, அமைதி, சுதந்திரம், சுபிட்சம், எதிர்காலம். போலி வாக்குகளையும், நம்பிக்கைகளையும் கொடுத்து அதன் அடிப்படைக் கருத்தைக் கொச்சைப் படுத்துவதை அவதானிக்கலாம். திருத்தூதர் மத்தியில் தூய ஆவியாரின் இருக்கை 3 உண்மைகளை வெளிப்படுத்து கிறது.

### 1. மக்கள் நலனா இலாப நோக்கா?

உலகின் செல்வங்கள் சமநிலை யில் பகிரப்படவில்லை. அண்ணளவாக 75% செல்வந்தர்கள் தமது வசதிகளுக்காக உலகின் மூலவளத்தை உறிஞ்சிக் குடித்துக் கொள்கிறார்கள் என்று "-உலகம் சமநிலை யற்றது 2022-" என்ற அறிக்கை தெரிவிக் கிறது. வசதி படைத்தவர்கள் மேலும் வசதியாகவும், ஏழைகள் மேலும் ஏழைக- ளாகவும் மாறும் அமைப்புகள் மாற்றப்பட வேண்டியது. இவர்களின் இடைவெளி மேலும் விரிந்து செல்கிறது. வாழ்க்கைத் தரம் உயர்ந்தாலும் அது அனைவரையும் சென்றடைவதில்லை. உலகமயமாக்கல் இலாபத்தை மட்டும் முன்னிலைப்படுத்த, பெந்தகோஸ்ட் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர்.

### 2. ஒரே வார்ப்பா அல்லது பன்முகப் பார்வையா?

ஏகாதிபத்திய கொள்கைப் பரம் பலுக்குள் உலகமயமாக்கல் என்ற பெயரில் கிராமங்கள் அகப்பட்டு, தமது தனித்து வங்களை, பண்பாடுகளை, மொழிகளை, அத்துடன் தத்தமது வரலாறுகளையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். பெந்தக் கோஸ்ட் இதற்கு எதிர்நிலையாக மகிழ்ச்சி நிறை பன்மைத் தன்மையைக் கொண்ட ஒரு திருநாள். சமகாலத்தில் நாம் வல்லரசுகளின் மொழியை பயன்படுத்த மறைமுகமாகத் திணிக்கப்படுவதும், தமது பொருட்களைச் சந்தைப்படுத்தவும் தமது விருப்பு வெறுப்புகளை அடுத்தவர்கள் மீது திணிப்பதும் அவதானிக்க முடிகிறது.

பெந்தக்கோஸ்ட் ஏகாதிபத்திய மொழிக்கு மாறாக விவிலிய மொழியை பயன்படுத்துகிறது. திருத்தூதர்கள் லத்தீன் அல்லது கிரேக்கம் பேச வில்லை. ஒவ்வொருவரும் தமது சொந்த மொழியில் பேசக் கேட்டார்கள். தி.பா-2.7 அடுத்தவர்கள் எம்மைப் போல் பார்க்க வேண்டும், பேச வேண்டும், வழிபட வேண்டும் என்பது ஏகாதிபத்திய சிந்தனைக்கு எதிரானது.

### 3. சுரண்டல் வாழ்வா மக்கள் நலப் பணியா?

அவர்களுள் எவரும் தமது உடைமைகளை தம்முடைய தாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. தி.ப-4.32 ஓரம் கட்டப்பட்ட மக்கள் அமைப்பு மையங்களுக்குச் செல்ல இத்திட்டம் ஊக்கம் அளிக் கிறது.

கட்டுப்பாடற்ற நவீன உலக மயமாக்கல், பன்முகத் தொழில் வாய்ப்புகள் என்ற பெயரில் தொழிலா ளர் மிகக் கேவலமாக சுரண்டப்படுகி றார்கள். தொழில் உரிமைகளை இழந்து மனிதத் தன்மையற்ற ஆபத்- தான தொழில் வாழ்நிலைக்கு தள்ளப் படுகிறார்கள். "போட்டி வாணிபத்தைத் தக்க வைத்தல்" என்று தொழிலாளர் கள் அடிப்படை உரிமைகளை இழக்கி றார்கள். மேலும் இது மனிதன் மனி தனைச் சுரண்டி வாழும் பண்பாட்டை ஊக்குவிப்பதாக உள்ளது. ஆனால் பெந்தெகோஸ்ட் திருத்தூதர்களைச் சுரண்டுவது அல்ல, மாறாக திருத் தூதர்களை இறைவனது பணியிலும், மக்கள் பணியிலும் பங்காளிகளாக மாற்றும் திட்டம். தூய ஆவி அவர்க ளுக்கு எப்பொழுதும் துணை நின்று மக்கள் பணியைச் சுற்றி நிற்கும். அது கதவுகளை உடைத்து ஆலய முற்றங்களுக்கும், சந்தைப்படுத்தும் இடங்களுக்கும் கூட்டிச் செல்கிறது. விடுதலை அல்லது தளை அறுக்கும் திருநாள். இது முகாமைத்துவப் பங்காளிக- ளாக மீட்பின் பணியில் செயல்படவும், நல்லி- ணக்கம், சகோதர தோழமையில் எப் பொழுதும் தம்மைப் புதுப்பித்து வாழ உந்தல் கொடுக்கிறது. பெந்தகோஸ்ட் மனிதர்களை மதித்து வாழவும், பன்மைத் தன்மையை ஏற்று வாழவும் ஊக்குவிக்க வேண்டும்.

## மருதமடு அன்னையின் யாழ்ப்பாண மறைமாவட்ட வருகையின் போது இறை மக்களால் பங்கு ரீதியாக வழங்கப்பட்ட காணிக்கை


| யாழ்ப்பாண மறைக்கோட்டம் | தொகை |
|---|---|
| பேராலயம் | 265,000.00 |
| கொழும்புத்துறை | 52,000.00 |
| மணியந்தோட்டம் | 21,200.00 |
| பாஷையூர் | 372,410.00 |
| குருநகர் | 604,000.00 |
| அடைக்கல அன்னை ஆலயம் | 57,000.00 |
| சுண்டிக்குளி | 85,400.00 |
| திரேசாள் ஆலயம் | 80,527.00 |
| நல்லூர் | 51,790.00 |
| நாவாந்துறை | 432,200.00 |
| கோப்பாய் | 440,200.00 |
| அஞ்சனந்தாழ்வு | 19,400.00 |
| புனித பத்திரிசியார் கல்லூரி | 50,245.00 |
| **தீவக மறைக்கோட்டம்** | **தொகை** |
| மண்டைதீவு | 285,440.00 |
| அல்லைப்பிட்டி | 76,000.00 |
| சாட்டி | 80,600.00 |
| சின்னமடு | 40,000.00 |
| கரம்பன் | 90,000.00 |
| ஊர்காவற்துறை | 94,000.00 |
| புங்குடுதீவு | 94,720.00 |
| நெடுந்தீவு | 120,000.00 |
| எழுவைதீவு | 300,000.00 |

| இளவாலை மறைக்கோட்டம் | தொகை |
|---|---|
| ஆனைக்கோட்டை | 242,000.00 |
| நவாலி | 233,050.00 |
| மானிப்பாய் | 390,000.00 |
| உடுவில் | 276,000.00 |
| பண்டத்தரிப்பு | 187,000.00 |
| சில்லாலை | 183,000.00 |
| விளான் | 160,000.00 |
| இளவாலை - யாகப்பர் ஆலயம் | 261,350.00 |
| இளவாலை - அன்னம்மாள் ஆலயம் | 234,000.00 |
| மாரீசன்கூடல் (போயிட்டி) | 106,500.00 |
| மாதகல் | 157,047.00 |
| ஊறணி | 132,700.00 |
| குளமங்கால் | 410,000.00 |
| சுன்னாகம் | 314,168.00 |
| உரும்பிராய் | 436,590.00 |
| **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | **தொகை** |
| ஒட்டகப்புலம் | 146,472.00 |
| அச்சுவேலி | 700,000.00 |
| கரவெட்டி | 329,660.00 |
| சக்கோட்டை | 175,000.00 |
| பருத்தித்துறை | 544,900.00 |
| மணற்காடு | 220,000.00 |
| தாழையடி | 280,000.00 |
| கட்டைக்காடு | 241,230.00 |
| பளை | 253,500.00 |

| | |
|---|---|
| மிருசுவில் | 378,618.00 |
| சாவகச்சேரி | 293,000.00 |
| **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | **தொகை** |
| பூநகரி | 149,420.00 |
| வலைப்பாடு | 130,110.00 |
| குமுழமுனை | 154,760.00 |
| முழங்காவில் | 170,859.00 |
| அக்கராயன்குளம் | 114,388.00 |
| உருத்திரபுரம் | 172,000.00 |
| கிளிநொச்சி | 527,460.00 |
| பரந்தன் | 251,500.00 |
| வட்டக்கச்சி | 249,110.00 |
| **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | **தொகை** |
| தர்மபுரம் | 204,700.00 |
| உடையார்கட்டு | 144,610.00 |
| புதுக்குடியிருப்பு | 433,250.00 |
| இரணைப்பாலை | 138,200.00 |
| முல்லைத்தீவு | 341,000.00 |
| சிலாவத்தை | 42,000.00 |
| அளம்பில் | 254,700.00 |
| கொக்கிளாய் | 70,700.00 |
| முகத்துவாரம் | 26,700.00 |
| கூழாமுறிப்பு | 428,500.00 |
| மாங்குளம் | 80,500.00 |
| மல்லாவி | 168,870.00 |
| **மொத்தம்** | **15,251,254.00** |

ஆயர் இல்லம் - யாழ்ப்பாணம்

# காலநிலை மாற்றங்களும், தவிக்கும் இளைய தலைமுறையும்!





**‘எங்கள் எதிர்காலத்தைப் பாதுகாத்துத் தாருங்கள்!!**

உலகமெங்கும் எதிரொலிக்கும் இளையோரின் அபயக் குரல் இது. கடந்த சில ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் மத்தியிலும், சமூக ஆர்வலர்கள் மத்தியிலும் உலகம் தழுவிய பேசு பொருளாக இருப்பது ‘காலநிலை மாற்றம்’ (Climate Change) மற்றும் ‘புவி வெப்பமாதல்’ (Global Warming). இந்தக் கால நிலை மாற்றத்தால் பூமிப்பந்தில் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு மற்றும் நெருக்கடிக்கு நாமும் விதி விலக்கல்ல.

நாம் எல்லாருமே நம் பிள்ளைகளுக்கு நம்மால் முடிந்ததைச் சேர்த்து வைத்துச் சொத்தாகவோ, பொருளாகவோ, பணமாகவோ விட்டுச் செல்லவே ஆசைப்படுகிறோம். இவையெல்லாம் வாரிக் கொடுத்து விட்டு, வாழத் தகுதியான இடமாகப் பூமியை விட்டுச் செல்லாமல் போனால், அதனால் என்ன பயன்? ‘உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டு ஆன்மாவை இழப்பது போலத்தான் (மாற் 8:37). எது முக்கியம்? எது வேண்டும்? என்பதே இங்கு கேள்வி. நாம் வாழும் இந்தப் பூமி, நமது முன்னோர்களால் அழகுறப் பராமரிக்கப்பட்டு, நேர்த்தியாகப் பாதுகாக்கப்பட்டு. நமக்குச் சீதனமாக வழங்கப்பட்டது. இதை நாம் நம் முன்னோர்களிடமிருந்து சொத்தாகப் பெற்றோம் என்பதைவிட, நம் பிள்ளைகளிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளோம் என்பதே உண்மை. நம் பிள்ளைகளுக்குச் சொத்துகளை விட்டுச் செல்கிறோமோ இல்லையோ, அவர்களிடமிருந்து கடனாகப் பெற்ற இந்தப் பூமியைப் பாதுகாப்பாக ஒப்படைப்பதுதான் நமது கடமையாக இருக்க வேண்டும்.

மனிதனின் சுயநலம், இயற்கை வளங்களை அளவுக்கு மீறிப் பயன்படுத்தவும், அவற்றை அபகரிக்கவும் தூண்டி விட் டது. அதன் அறுவடைதான் சுற்றுச்சூழலை மாசுபடுத்தியது, காடுகளை அழித்தது, நீர்நிலைகளைப் பராமரிக்கத் தவறியது போன்ற பொறுப்பற்ற செயற்பாடுகள். அறிந்தோ அறியாமலோ செய்த தவறுகள் அல்ல இவை. இவை யாவும் நன்கு திட்டமிடப்பட்ட இயற்கைச் சுரண்டல்கள், கனிமவளங்கள், இயற்கை வளங்கள், காடுகள், மலைகள், ஆறுகள், மணல், மேடு, திட்டு என யாவும் இங்கு களவாடப்படுகின்றன.

இதன் விளைவு, இன்று பூமி வெப்பமடைகிறது. பனிமலை உருகுகிறது. கடல் மட்டம் உயர்கிறது, மழையின்றி நிலம் வறண்டு போகிறது. பருவம் மாறி மழை பொழிவதால் வெள்ளச் சீற்றமாகிறது, அமில மழை கொட்டுகிறது, பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படுத்தியிருக்கிறது. கணிக்க முடியாத அளவிற்குப் பருவ நிலைகளில் மாற்றம் ஏற்படுத்தியிருக்கிறது. அனைத்திற்கும் காரணம் இயற்கை வளங்களை அளவு கடந்து அபகரிப்பதன் விளைவே! ‘கொடுப்பதை மிகுந்து எடுப்பது’ என்ற மனிதனின் தீய குணமே இதற்குக் காரணம்.

**மண்ணும் மலையும் காடும்**
**கடலும் ஓடும் ஆறும்**
**நம் சொந்தம்**
**கண்டும் காணா வாழ்ந்து**
**மடிந்தால் நாளைய தலைமுறை**
**என்னாகும்?**
**மண்ணும் வறண்டு மரமும் மடிந்து**
**ஊரும் உறவும் சுடுகாடு**
**பயிரும் உயிரும் தாகம்**
**தணிக்கத் தண்ணீருக்கே**
**பெரும் பாடு!**
**பூமியின் கதறல் கேளீர்**
**குமுறும் மலையைப் பாரடா!**
**பொங்கும் கடலும் ஏனடா?**
**மரண ஓலம் கேளடா?**

என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

‘இருக்கும் இடமே போதும்’ என்ற மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இந்த மண்ணில் வாழ்பவர்கள் மிகக் குறைவு. ‘உலகம் தனக்கு மட்டுமே’ என்று மனிதன் கொண்டிருக்கும் மனநிலையும், ‘தனக்கே முன்னுரிமை’ என்ற ஆணவமும் பேரழிவை நோக்கி இப்பூமியை நகர்த்திக் கொண்டிருக்கிறது. இயற்கையைப் பல காலமாக வெல்லத் துடித்த மனிதன், இன்று அதை மெல்ல மெல்லக் கொல்லத் துணிந்து விட்டான். தலை முறைச் சீதனம் கைநழுவிப் போவதை வரப்போகும் எந்தத் தலை முறையும் மன்னிக்காது, மறக்காது.

இவ்வேளையில், 2023-ஆம் ஆண்டு (நவ. 30- டிச. 12) ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடை பெற்ற ‘COP28’ என்று அழைக்கப்படும் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பில், காலநிலை மாற்றம் தொடர்பான 28-வது மாநாட்டிற்குத் திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கிய செய்தியே நினைவுக்கு வருகிறது:

“நமது எதிர்காலம் என்பது இன்றைய நிகழ்காலத்தில் நாம் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்து அமைகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பு என்பது கடவுளுக்கு எதிரான பெருங்குற்றம் பெரும் பாவம். தனி யொரு மனிதனின் தனிப்பட்ட பாவச் செயல் மட்டுமல்ல, அதையும் கடந்த ஒரு சமூகப் பாவம் இது. ஒட்டுமொத்த மனித குலத்தையும் பெரிதும் பாதிக்கும் செயல் இது. குறிப்பாக, இது சமூகத்தில் மிகவும் பலவீனமானவர்களைப் பாதிக்கக்கூடியதாகவும், தலைமுறைகளுக்கிடையே மோதல் முரண்பாடுகளைக் கட்டவிழ்த்து விடப்படுகின்ற அபாயத்தையும் கொடுக்கக்கூடியதாகவும் உள்ளது. எனவே இது, மனித மாண்போடு நெருங்கிய தொடர்பு கொண்டதோர் உலகளாவிய சமூகப் பிரச்சினை. ஆகவே, எதை நாம் தேர்ந்தெடுக்கிறோம்? ‘வாழ்வின் கலாசாரத்தையா? அல்லது இறப்பைத் தழுவும் கலாச்சாரத்தையா?’ என்ற கேள்வியை இது முன் வைக்கிறது. இச்சூழலில் நாமனைவரும் வாழ்வைத் தேர்ந்தெடுப்போம் நாம் எதிர்காலத்தைத் தேர்ந்தெடுப்போம் (Let us choose Life! Let us choose the Future!)” என்கிறார்.

தாயாய், தெய்வமாய் நாம் வணங்கும் பூமியின் அழுகுரல் நம் செவிகளைத் துளைத்தாலும் கேட்கச் செவியற்றவர்களாய் இருக்கின்றோம். ஏழைகள், வறியோர், சமூகத்தில் பலவீனமானவர்களின் குமுறலுக்குச் செவிகொடுப்போம். இளையோரின் நம்பிக்கை மீதும், குழந்தைகளின் எதிர்காலக் கனவுகளின் மீதும் கவனம் கொண்டிருப்போம். வளமான எதிர்காலம் அவர்களுக்கு மறுக்கப்படக்கூடாது என்பதை உறு-திப்படுத்துவோம். இதுவே நம்மீது சுமத்தப்பட்டுள்ள பெருங்கடமை. சமூகப் பொறுப்பும் கூட. ஏனெனில், இந்தப் பூமி நமக்கு மட்டும் சொந்தமில்லை. உண்மையில் நாம் இதன் பராமரிப்பாளர்கள் மட்டுமே. அடுத்த தலைமுறைக்குப் பத்திரமாக இதை விட்டுச் செல்லும் கடப்பாடு உள்ளவர்கள் என்பதை நினைவில் கொள்வோம்.

இந்தக் காலநிலை மாற்றம் பூர்வகுடி மக்களைப் பாதிப்பது. காடுகள் அழிப்பது. பசி பட்டினியை உருவாக்குவது, உணவு, நீர் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவது, புலம் பெயர்தலை மறைவாக உருவாக்குவது என மானுட வாழ்வியல் பிரச்சினைகளை மறைமுகமாக ஏற்படுத்தி வருகிறது. ஆகவே, எதிர்காலம் என்பது யாவருக்கும் உரித்தானது. இதை மீட்டெடுப்பதும், மீட்டுருவாக்கம் செய்வதும் ஒரு கூட்டுச் சமூகப் பொறுப்பு அல்லவா! திருத் தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவது போன்று, ‘போர்க் கருவிகளுக்காகவும், இராணுவத் தளபாடங்களுக்காகவும் செலவிடப்படும் தொகைகளைப் பொதுவாக வைத்து வறுமையை ஒழிக்கவும், பட்டினியைப் போக்கவும், மனித வளத்தையும், இயற்கையையும் பேணவும் உதவக்கூடிய ‘உலகளாவிய நிதி ஆதாரம்’ (Global Fund) ஒன்றை உருவாக்குவோம்.

மேலும், உலகளாவிய வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தாக்கங்களுக்கு ஏற்ப வாழ்வியல் முறையை மாற்றியமைத்துக் கொள்வோம். அதற்குக் காலநிலை கல்வியில் கவனம் செலுத்துவோம் காலநிலை மாற்றம் குறித்த பாடத் திட்டம் பள்ளிக் கல்வியில் கட்டாயப் படுத்துவோம் இயற்கையுடன் இயைந்து வாழப் பழகிக்கொள்வோம்

சூரிய சக்தி, இயற்கை எரிபொருள் போன்ற பயன்பாட்டை உருவாக்குவோம். அவ்வாறே, நீர், நிலம், காற்று மாசுபடுவதை உடன-டியாகக் கட்டுப்படுத்துவோம் சமூக ஆர்வலர்களை ஒருங்கிணைத்து, காலநிலை நெருக்கடிக்குத் தீர்வு காண்பதன் அவசியம் பற்றிய விழிப்பு-ணர்வு பெறுவோம்.

அன்பர்களே! நாம் விழித்தெழ வேண்டிய நேரமிது. கல்விப் பணிகளில் இயற்கை நேயத்தை. சமூகப் பாதுகாப்பை, சுகாதார வாழ்வைப் பற்றிய போதனைகளுடன், செயல்முறை வழிகாட்டுதலை மேற்கொள்வோம். இயற்கையோடு இணைந்த வாழ்வு, தோட்டக் கலை, மரம் நடுதல், சிக்கனமான பயன்பா-ட்டில் எரிபொருள் மற்றும் மின்சாரம் பயன்படுத்துதல், நெகிழி போன்ற மாசு விளைவிக்கும் பொருள்களைத் தவிர்ப்பது, இயற்கைக்கு முரணான எந்தவொரு செயலையும் மேற்கொள்ளாமல் இருப்பது என்ற வாழ்க்கை முறையை ஊக்கு விப்போம்.

இறுதியாக, ஆட்சியாளர்களும், அரசுகளும், சமூக ஆர்வலர்களும் மட்டுமன்றி, நாம் ஒவ்வொருவரும் முனைப்புடன் செயற்பட்டால் தான் எதிர்காலத் தலைமுறைக்குப் பாதுகாப்பான வாழ்விடத்தை நம்மால் வழங்கிட முடியும். கண்ணாகப் பூமியைக் காத்திடுவோம்! தலைமுறைக்குப் பொன்னாக வளம் கொண்டு பரிசளிப்போம்!

> **தாயாய், தெய்வமாய் நாம் வணங்கும் பூமியின் அழுகுரல் நம் செவிகளைத் துளைத்தாலும் கேட்கச் செவியற்றவர்களாய் இருக்கின்றோம். ஏழைகள், வறியோர், சமூகத்தில் பலவீனமானவர்களின் குமுறலுக்குச் செவிகொடுப்போம். இளையோரின் நம்பிக்கை மீதும், குழந்தைகளின் எதிர்காலக் கனவுகளின் மீதும் கவனம் கொண்டிருப்போம்.**

## மரம் பேசுகிறேன்



**நா**ன் நீரிலும் இருப்பேன், நிலத்திலும் இருப்பேன், மலையிலும் இருப்பேன், ஏன் உன் வீட்டுத் தோட்டத்திலும் இருப்பேன், உன் வீட்டு சுவற்றிலும் இருப்பேன், நான் இருக்கும் இடமெல்லாம் உனக்காகவே நான் என்ற கர்வத்தோடு இருக்கிறேன்.

நான் எப்போதும் உன்னை வெறுக்க மாட்டேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் என்னிடம் கேட்காமல் எடுத்துக் கொள்ளலாம். துண்டுகளாக வெட்டி-னால் உனக்காகவே நான் இருக்கிறேன், என்னை நீ மரம் என்று நினைக்காமல் என்னை நீ எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ள நினைக்கி றாயோ அப்படியெல்லாம் என்னை நானே மாற்றி கொண்டு உனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உனக்கு மட்டுமல்ல என்னோடு சகஜமாக வாழும் விலங்குகளுக்கும், பறவை-களுக்கும் நான் உற்ற நண்பனாக இருக்கிறேன்.

நான் சிலருடன் மட்டும் இருந்தால் தோப்பு எனவும், பெரும் குடும்பமாக இருந்தால் காடு எனவும் பெயர் வைத்து அழைக்கிறீர்கள். பாதுகாக்கிறார்கள். தொடர்ந்து என்னை உங்களுக்காக அர்ப்பணித்துக் கொள்கிறேன். நானின்றி உங்களால் உயிர்வாழ முடியாது. உங்களுக்காகவும் உங்கள் சந்ததிக்காகவும் எங்களை நீங்கள் பாதுகாப்பாக பேணவேண்டியது உங்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். எனவே எங்களை பேணிப் பாதுகாருங்கள்.



# தூய ஆவியார் நம் தாய்

உயிர்ப்புப் பெரு நாள் முடிந்து ஐம்பதாம் நாளில் நாம் தூய ஆவியாரின் பெரு விழாவைக் கொண்டாடுகிறோம். இதுவே பெந்தேகோஸ்து பெருவிழா! இயேசுவின் சீடர்கள் முற்றிலுமாக மாற்றம் பெற்ற நாள் அச்சம் தோற்கடிக்கப்பட்டு, வீரம் வெற்றி கொண்ட நாள் சீடர்களின் மூடிய கதவுகள் நற்செய்தி அறிவிப்புக்கெனத் திறக்கப்பட்ட நாள்.

“பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர, சீடர்கள் புத்துயிர் பெறுகின்றனர் அந்நாள் வரை உரோமைப் படைகளுக்கு அஞ்சி, ஒடுங்கிக் கிடந்தவர்கள் தூய ஆவியாரின் பெருமூச்சினால் நிரப்பப்பட்டு, உயிரோட்டம் பெறுகின்றனர் புது உயிர்களாகத் துணிவுடன் வெளியே வந்து நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர்

**அருட்பணி : ஜெ.ஞானசேகரன்**

சீடர்களின் சந்தேகங்கள் அன்பு நிரம்பிய நம்பிக் கையினால் விரட்டப்பட்ட நாள் இது அறுவடை யின் நாள்! ஆம், நற்செய்தி அறிவிப்பின் வழியாக மக்களைத் திரு அவைக்கு அறுவடைச் செய்யும் நாள். தமது மீட்புப் பணியை வெற்றிகரமாக முடித்த இயேசுக்கிறிஸ்து மாட்சிமையுடன் விண்ணோக் கிச் சென்று, தாம் ஏற்கெனவே வாக்களித்தபடி இறை ஆற்றலாம் தூய ஆவியாரை நமக்கு அனுப்பிய நாள். இன்றே திரு அவை பிறந்த நாள்! இந்த நாளை மகிழ்வுடன் கொண்டாடுவோம். இந்நாள் நமக்குச் சொல்லித் தரும் அழகான பாடங்களை இதயத்தில் ஏற்போம்.

‘ஆவி’ என்ற சொல் எபிரேயத்தில் ‘ரூஆ’ (Ruah) என்றும், கிரேக்கத்தில் ‘நீயூமா’ (Pneuma) என்றும், இலத்தீனில் ‘ஸ்பிரித்துஸ்’ (Spiritus) என்றும் அழைக்கப் படுகிறது. மூச்சு, காற்று, ஆன்மா என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். ‘ரூஆ எலோயிம்’ என்பது கடவுளின் ஆவி, கடவுளின் வல்லமை, கடவுளின் வாழ்வு என்றும் பொருள் கொள்கிறோம். ‘ரூஆ’ என்ற சொல் பழைய ஏற்பாட்டில் 378 தடவைகள் காணப்படுகின்றன. ‘தூய ஆவியார்’ எனும் சொல்லாடல் புதிய ஏற்பாட்டில் 311 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மூவொரு கடவுளின் மூன்று ஆட்களில் மூன்றாவதாக வெளிப்படுத்தப்பட்டவர் தூய ஆவியே!

திருவிவிலியம் தூய ஆவிக்குப் பல பெயர்களைத் தருகிறது. அவை: உயிர் அளிப்பவர், வாக்குறுதியின் ஆவி, பிள்ளைகளாக்கும் ஆவி, உண்மையை வெளிப்படுத்துபவர், வல்லமையின் ஆவி, அருள்கொடைகளின் ஆவி, கிறிஸ்துவின் ஆவி, விடுதலையின் ஆவி, கடவுளின் ஆவி, மகனின் ஆவி, கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி என்பன. திருவிவிலியத்தில் தூய ஆவியார் தண்ணீர், எண்ணெய், நெருப்பு, புறா, காற்று, கை போன்ற பல அடையாளங்களால் சுட்டிக்காட்டப்படுகிறார். தூய ஆவிக்கு நாம் பல பெயர்களையும், அடையாளங்களையும் கொடுத்தாலும், ‘தாய்’ என்ற பெயர் மிகப் பொருத்தமாக இருக்கும்.

பெங்களூர் உயர் குருமடத்தில் பேராசிரியரான இத்தாலி நாட்டைச் சார்ந்த அருட்பணியாளர் பியோ அவர்கள், ‘தூய ஆவி ஒரு தாய்’ என்பார். தூய ஆவியார் ஒரு தாயைப் போல அருகிலிருப்பவர், அரவணைப்பவர், கற்றுத்தருபவர், காயங்களை ஆற்றுபவர், வாழ்வு அளிப்பவர், வழிகாட்டுபவர், வரம் தருபவர். இயேசுவின் வாழ்வில் அவரின் அன்னையைப் போலவே, அவரின் பணிக்கு ஆதாரமாகவும், அடித்தளமாகவும் கூடவே பயணித்தவர் இந்தத் தூய ஆவியே. இயேசு திருமுழுக்குப் பெற்றபோது, அவர்மீது இறங்கிய தூய ஆவி அப்பொழுதிலிருந்தே அவர் மீது இருந்தார் (யோவா 1:32). திருமுழுக்கு நிகழ்ச்சிக்குப் பின்னர் தூய ஆவி அவரைப் பாலைநிலத்துக்கு அனுப்பி வைத்தார் (லூக் 4:1). கடவுளின் ஆவி இயேசுவோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து, எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார் (திப 10:38). ஆண்டவருடைய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட இயேசு, இறையாட்சிக்கான பணியைச் செம்மையாகத் தொடங்குகிறார். அதே ஆவியைத் தம் சீடர்களும் பெறுவார்கள் என வாக்களிக்கிறார் (யோவா 14:16). தூய ஆவியாரைத் ‘தந்தையின் வாக்களித்த வல்லமை’ (லூக் 1:35) என லூக்கா அழகாகக் குறிப்பிடுகிறார்.

நற்செய்தியில் இயேசு தூய ஆவியாரைத் ‘துணையாளர்’ என்றும், ‘உண்மையை வெளிப்படுத்துபவர்’ என்றும், ‘தூய ஆவியாரே உண்மை’ என்றும், ‘அவரே சீடர்களோடு தங்கிச் சான்று பகர ஆற்றல் அளிக்கிறார்’ என்றும், ‘அவரே சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்’ என்றும், ‘சீடர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார்’ என்றும் தூய ஆவியைக் குறித்து யோவான் விளக்கம் தருகிறார். இன்று நாம் கொண்டாடும் தூய ஆவியாரின் வருகையின் விழாவில், அவரின் மூன்று முக்கியச் செயல்களைச் சிந்திப்போம்.

**1.வாழ்வளிப்பவர் - தூய ஆவியார்**

உயிர் வாழ்வுக்கு மூச்சு இன்றியமையாதது. மூச்சு நின்றுவிட்டால் மனித வாழ்வும் முடிவுக்கு வந்து விடும். தூய ஆவி என்பது மூச்சுக் காற்று. பழைய ஏற்பாட்டில் தூய ஆவியார் உயிர் அளிப்பவராகக் காட்டப்படுகின்றார். உயிர் ஊட்டப்படும் ஒவ்வொரு நிகழ்விலும் தூய ஆவியார் செயற்படுகிறார். படைப்பினிலே “நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது” (தொநூ 1:2). மனிதனின் படைப்பிலே “ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்” (தொநூ 2:7) என்ற இறைவார்த்தைகள், கடவுள் வாழ்வளிப்பவர் என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. கடவுளுடைய படைப்பாற்றலின் உருவகமாக ஆவியார் செயற்பட்டார் (திபா 33:6 எசே 37:1-10). அதே ஆவியார் திருத்தூதர்களுக்கும் வாழ்வு அளித்ததை இன்றைய முதல் வாசகம் சுட்டிக்காட்டுகிறது.

பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர, சீடர்கள் புத்துயிர் பெறுகின்றனர். அந்நாள் வரை உரோமைப் படைகளுக்கு அஞ்சி, ஒடுங்கிக் கிடந்தவர்கள் தூய ஆவியாரின் பெருமூச்சினால் நிரப்பப்பட்டு, உயிரோட்டம் பெறுகின்றனர். புது உயிர்களாகத் துணிவுடன் வெளியே வந்து நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர். முதலில் உறுதியற்றவராய் இருந்த பேதுரு, வல்லமையுள்ள அருளுரையாளராக மாறுகிறார். அவரது இந்த மாற்றத்திற்குத் தூய ஆவியே காரணம். ஆவியின் ஆற்றலால் இயேசுவுக்காகத் தம் உயிரையும் அர்ப்பணிக்க முன்வந்தனர்.

**2.வழிநடத்துபவர் -தூய ஆவியார்**

இஸ்ரயேல் மக்களை வழிநடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை வழிநடத்தியவர் தூய ஆவியார். ஒத்னியேல், கிதியோன், சிம்சோன் போன்ற நீதித் தலைவர்களையும் (நீத 3:10, 6:34), சாலமோன், தாவீது போன்ற அரசர்களையும் வழிநடத்தியவர் ஆவியார்தாம் (திபா 51:11). அவரே இறைவாக்கினர்களையும் (எசா 61:1-2) வழிநடத்தினார். இறைவாக்கினர்களுள் முதன்மையானவராகக் கருதப்பட்ட எலியா (1அர 18:2) பாகால் தெய்வத்தை எதிர்த்துப் போரிட்டது தூய ஆவியால்தாம். இயேசுவின் தாய் மரியா மற்றும் தந்தை யோசேப்பை இயக்கியதும் இந்தத் தூய ஆவியே. சக்கரியா, எலிசபெத்து, யோவான், சிமியோன் போன்றவர்களும் இதே ஆவியால் வழிநடத்தப்பட்டவர்கள்தாம். திருத்தூதர்கள் அனைவரும் ஆவியால் வழி நடத்தப்பட்டதைத் திருத்தூதர் பணிகள் நூல் மிக ஆழமாக எடுத்துக் காட்டுகிறது. இந்த நூல் ‘தூய ஆவியின் நற்செய்தி’ என அழைக்கப்படும் அளவிற்கு அவரின் செயற்பாடுகளைத் திருத்தூதர் பணிகள் நூலில் காணலாம்.

நம் ஒவ்வொருவரையும் உயிருள்ள மனிதமாக மாற்றுபவர் தூய ஆவியே. நம்முள் இருந்து, நம்மை வழிநடத்துபவர் தூய ஆவியார். அவரே திரு அவையின் உயிர்மூச்சாக இருந்து செயற்படுகிறார். தூய ஆவியாரே திரு அவையின் தலைவர்களையும் வழிநடத்துகிறார். அவரே திரு அவையின் பாது காவலராக, அரணாக இருந்து செயல்படுகிறார். நமக்கு, நம் திரு அவைக்கு உயிர் கொடுத்த தூய ஆவியார் நம்மையும், திரு அவையையும் நிறை உண்மையை நோக்கி வழிநடத்துகிறார் (யோவா 16:13). “நாம் தூய ஆவியால் வழிநடத்தப்படவில்லை என்றால், நம் உழைப்பு வீண் நாம் செய்கின்ற செயல்களில் சாரமோ, சத்தோ இருக்காது” என்பார் புனித ஜான் மரிய வியான்னி.

**3. வரம் தருபவர் - தூய ஆவியார்**

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரிலும் தூய ஆவியாரின் முத்திரை பதிக்கப்படுவதால், எல்லாருக்கும் அவர் வரங்களையும், கொடைகளையும் பொழிகிறார் (1கொரி 12:7). அதாவது, பிணி தீர்க்கும் வரம், சொல் வரம், வல்ல செயல்களைச் செய்யும் வரம், பரவசப் பேச்சுப் பேசும் வரம், பகுத்தறியும் வரம், இறைவாக்கு உரைக்கும் வரம், தொண்டாற்றும் வரம், கற்றுக் கொடுக்கும் வரம், ஈகை வரம் (1கொரி 12:8-10 உரோ 12:6-8) போன்ற அருள்கொடைகளையும் தூய ஆவியார் தருவதாகப் புனித பவுல் உறுதிபடக் குறிப்பிடுகிறார்.

திருத்தூதர் பவுல், ஆவியார் தரும் கனிகளைப் பட்டியலிடுகிறார். அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என ஒன்பது விதமான கனிகளைத் தூய ஆவியார் நமக்கு அருள்கிறார் (கலா 5:22-23). வரங்களும், கனிகளும், கொடைகளும் எதற்காக? அவை அனைத்தும் பொது நன்மைக்காக, அதாவது, கிறிஸ்தவ சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்காகவே பொழியப்படுகின்றன.

தூய ஆவியாரால் நாம் ஒவ்வொருவரும் வழிநடத்தப்பட நம் இதயம் திறப்போம். திருமுழுக்கில், உறுதிப்பூசுதலில், குருத்துவத்தில் பெற்ற தூய ஆவியாரே நம் மூச்சு, நம் உயிர்! அவரே நம் வாழ்வு! நம்மை இயக்கும் ஆற்றல்! அதனால் தான் இறைவனை ‘அப்பா, தந்தையே’ என்று அழைக்கிறோம். இவ்வாறு நாம் இறைவனை அழைக்கும்போது, ‘நாம் கடவுளின் பிள்ளைகள்’ என்று தாயாம் தூய ஆவியார் சான்று பகர்கிறார் (உரோ 8:15-16).

திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவதுபோல, நாம் பகுதி நேரக் கிறிஸ்தவர்களாகக் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் செயற்படாமல், முழுநேரக் கிறிஸ்தவர்களாக, அனைத்து நேரங்களிலும் கிறிஸ்தவ அழைப்பை வாழ்ந்து வெளிப்படுத்துவோம். முழு நேரக் கிறிஸ்தவர்களாகச் செயற்படும்பொழுது தூய ஆவியார், ஒரு தாயாக, நம் ‘உள்ளிருக்கும் கடவுளாக’ (1கொரி 3:16) நம்மிலிருந்து செயலாற்றுவதை உணரலாம்.

# அன்பின் மகிழ்வு

10



**திருமண வாழ்விற்கு அடித்தளம் திருத்துவம் ஆகும்.**

திருமண வாழ்விற்கு அடித்தளம் திருத்துவம் ஆகும். சிறப்பாக தம்பதிகளின் ஒன்றிப்பு திருத்துவ ஒன்றிப்பின் அடையாளமாகத் திகழ்கின்றது. திருமணத்தின் நோக்கம் என்ன என்று சிந்திக்கின்ற போது ஒரே ஒரு நோக்கம் தான் உண்டு திருமண அன்பில் வளர்ந்து பிள்ளைகளைப் பெற்று எடுப்பதாகும். இவை இரண்டும்இருவேறானநோக்கங்கள்அல்ல மாறாக ஒரே ஒரு நோக்கம் ஆகும். எனவே தம்பதிகள் நாளுக்கு நாள் அன்பில் வளர்வதும் அந்த அன்பில் பிள்ளைகளைப் பெற்று எடுப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

அன்பற்ற நிலையில் பிள்ளைகளைப் பெற்று எடுப்பது என்பது பிள்ளைகளில் பல தாக்கங்களை ஏற்பட்டுத்துகின்றன.

எனவே தான் பிள்ளைகளின் உருவாக்கம் பிள்ளை தாயின் கருவில் உருவாக்கின்ற போது ஆரம்பிக்கின்றது என்கின்றனர் உளவியலாளர்கள்.

திருவிவிலியம் கடவுள் தம் உருவில் மானிடரை படைத்தார். கடவுளின் உருவிலிலேயே அவர்களை படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார் என்கின்றது. இங்கே கடவுளின் உரு என்பது என்ன என்பதைச் சிந்திக்கின்ற போது கடவுள் அன்பு மயமானவர் என்பதே பொருள் திருத்துவத்தில் இருக்கும் தந்தை மகன் ஆவி என்று மூவருள் இருக்கும் ஒருமை ஆகும். எனவே திருத்துவம் அன்பின் அடையாளம் ஒற்றுமையின் அடையாளம்.

எனவே கணவன் மனைவி இருவராக இருதாலும் ஒருவராகவே இருக்கின்றனர்.

மணத்தம்பதிகளின் அன்பு மகப்பேறு அளிக்கும் அன்பு ஆகும். இந்த அன்பு கடவுளின் அகவாழ்வின் அன்பின் அடையாளமாக உள்ளது.

எனவே பல்வேறு இளைஞர்கள் யுவதிகளுக்குத் திருமண அன்பு பற்றிய கருத்துக்களை வழங்கிய திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் இது பற்றிய விளக்கம் அளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டள்ளார்.

நம் கடவுள் தமது ஆழமிக்க மறைபொருளில் தனிமையில் அல்ல தனித்த ஒரு குடும்பமாகவே உள்ளார். மகன் தன்மை குடும்பத்தின் உள்ளியல்பாகிய அன்பைக் கொண்டு உள்ளது.

இக் குடும்பத்தில் அந்த அன்பாக ஆவி உள்ளார். எனவே திருமண வாழ்வில் மணத்துணைவர்கள் திரித்துவத்தின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கவேண்டும்.

எமது குடும்பத்திலும் திரித்துவத்தின் ஒற்றுமை மிளிரச் செபிப்போம்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

## அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை

**மணமகன் தேவை**

வயது: 29
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: Admin Assistant
கல்வித்தகைமை: Behelor in Software Engineer London Metropolitan University (ESOFT)
உதவி அரசாங்க பிரிவு: யாழ்ப்பாணம் (உடுவில்)
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
IT Prof or Degree Qualification Sri Lanka or abroad

**மணமகள் தேவை**

வயது: 33
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: Senior Engineer in Panasonic Singapore
கல்வித்தகைமை: B.Sc in Mechanical Engirneer University of Peradeniya
பிரதேச செயலகம் : யாழ்ப்பாணம் (உடுவில்)
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
Doctor

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும்**
**அகவொளி குடும்ப நல மையம்**
**புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077- 942 2970, 077- 904 7651**
**021- 222 2856**

# கருவறை ஞாபகங்கள்...

**வீ**டு என்கிற அழகான தூக்கணாங்குருவிக் கூட்டின் ஞாபகங்களை ஆசையோடு பேசுகிறேன். வீடு கூட ஒரு கருவறை தான். ஆனால் கருவறையைவிட ஒரு தனிச்சிறப்பு இந்த வீட்டுக்கு இருக்கிறது. கருவறையில் வாழ்ந்த இடத்தின் நினைவுகள் நெஞ்சிலே நிற்பதில்லை. தம் வீட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஏதோ ஒரு ஞாபகம் ஒட்டியே இருக்கிறது.

முதல் முதலாய் உடும்பு பிரட்டிய அந்த சாமியறை மூலை அம்மா சொல்லி ஞாபகத்தில் இருக்கும். ஒரு மைனாக் குஞ்சு போலத் தத்தித் தத்தி நடந்து விழுந்த போது தாங்கிய விறாந்தை, அப்பாவின் மார்பில் படுத்துத் தூங்கிய மண்திண்ணை, அம்மா நிலா காட்டிச் சோறு ஊட்டுகிற அந்த ஜன்னல் ஓரம், பாடப் புத்தகத்துக்குள் மறைத்து வைத்த மயிலிறகு குட்டி போட்டு இருக்கா என அடிக்கடி எட்டிப் பார்க்கும் சின்ன அறையின் புத்தகப் பறன், தம்பியோடு ஒழிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கையில் தலையில் கதவு அடித்து அந்தக் கதவில் என் இரத்தம் ஒட்டிக் கிடந்த அந்த இடம், பள்ளிப் பருவத்தில் மீசை அரும்ப தொடங்கிய ஒரு வாலிப நாளில் பள்ளித் தோழி ஒருத்தி தந்த கடிதத்தை பரவசத் தோடு உடலெல்லாம் செவி யாக்கி நான் ரகசியமாய் வாசித்ததை இன்னமும் ரகசியமாய் அடைகாக்கும் சின்ன அறையின் சுவர்கள், நான் முதல் முதலாய் பெற்ற வெற்றிக் கிண்ணத்தை பெருமையோடு மார்பிலே சுமக்கிற எங்கள் வீட்டு அலமாரி, அம்மா உருண்டை திரட்டி தரும் நிலாச் சோற்றை உண்டு விட்டு அடுத்த உருண்டைக்காய் விரல் சூப்பிக் கொண்டு காத்திருக்கும் அந்தப் பால் மணல் முற்றம், இப்படி நினைத்து நினைத்துப் பார்க்கையில் நெஞ்சிலே தேன் ஊற வைக்கும் எத்தனையோ அழகிய ஞாபகப் பொக்கிஷங்கள் எம் வீட்டின் நினைவுகளாய் நிறைந்தே கிடக்கின்றன.

வீடு வெறும் கட்டிடம் அல்லவே. அதற்கு உயிர் இருக்கிறது. அதன்



ஒவ்வொரு கல்லோடும் எமக்கு ஏதோ ஒரு உறவு இருக்கிறது. வீடு விட்டுப் பிரிந்து செல்லும் கணங்களில் நெஞ்சில் ஏதோ ஒன்று கனக்குமே. அதுதான் அந்தப் பிணைப்பு. வீடு எங்களை நேசிக்கிறது. எத்தனை இடங்களில் எந்தப் பஞ்சு மெத்தையில் படுத்துக் கிடந்தாலும் சொந்த வீட்டில் கட்டிலிலோ பாயிலோ படுக்கும் சுகத்தைப் போல எதுவும்இல்லையே.வீட்டைப் போல சுதந்திரம் எங்கும் கிடைப்பதில்லை. நீ நிஜமாய் இருக்கும் இடம். நீ நீயாய் இருக்கிற இடம். உலகத்துக்காய் நீ போடுகிற முகமூடிகளைக் கழற்றி எறிந்து நீ சுதந்திரமாய் சிரிக்கிற, உண்மையாய் அழுகிற இடம் வீடு தானே.

**அருட்பணி. எஸ்.அஜந்தன்**

ஒவ்வொரு குருவிக்கும் கூடு போல ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வீடு அமைந்துவிடுகிறது. மனிதன் ஒரு வீட்டுக்குள் இருக்கிறான் என்பது வளமையானது, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு வீடு இருக்கிறது என்பதுஉண்மையானது.

மண்ணால் கல்லால் சீமெந்தினால் செய்யப்படுகிற வெறும் கட்டிடம் எப்போது வீடாகிறது. எல்லாக் கட்டிடங்களும் வீடு அல்லவே. பாசக் கொடியிலே பூத்துக் கிடக்கும் சில மனிதர்கள் அன்பால் இணைந்து அன்புக்காய் வாழும் போது அது வீடாகிறது. அங்கே என்னை நேசிக்க யாரோ இருக்கிறார்கள் என்கிற பாதுகாப்புணர்வும் பாச உணர்வும் நிறைந்தே இருக்கிறது. சுயநலன்கள் கடந்த ஒரு தியாக கோயில் அது.

அன்பு அணையாத விளக்காய் எரிந்து கொண்டே இருக்க, வியர்வைகளையும் உழைப்பையும் விட்டுக் கொடுக்கும் மனதையும் மற்றவரின் வெற்றிக்காய் உழைப்பதையும் கட்டாயம் செய்ய வேண்டுமென ஒரு தாயைப் போல இந்த வீடு உரிமையோடு உன்னிடம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

இங்கே வாழ்பவர்கள் மனிதர்கள் ஆகையால் பிழைகள் தவறுகள் பல இருக்கும்.தாங்கிக் கொண்டு நடப்பது அவசிய தேவையாகிறது. குடும்பத்திற்காக வீட்டுக்காக எதை வேண்டுமானாலும் இழந்து விடுங்கள். ஆனால் எதற்காகவும் ஒருபோதும் குடும்பத்தை வீட்டை இழந்து விடாதீர்கள். அது விலைமதிப்பில்லாத பொக்கிஷம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் விவாகரத்து மட்டுமே தீர்வாகிடாது. விட்டுக் கொடுத்து தெய்வங்களாகுங்கள்.

கடவுள் இணைத்ததை பிரித்து விடாதீர்கள். வேற்றுமைகள் கூட அழகு தானே. பலவகை வர்ணங்கள் ஒன்றாய் இருந்திட ஒத்துக் கொள்வதால் தானே வானவில் கூட வானத்துக்கு வருகிறது.

கடவுள் தந்த மாபெரும் பரிசு இந்த வீடு அதை ஆனந்தமாய் அனுபவியுங்கள். ஆயிரம் அர்த்தங்கள் வாழ்வில் வந்து நிறையும். அழகிய ரோஜாத் தோட்டமாய் வாழ்வு வாசம் வீசிச் சிரிக்கும்.நீளத் தொடரட்டும் உங்கள் பயணங்கள்.

## உறவுகளை வளர்ப்போம்...

அலைபேசி கைக்குள் அடங்கிவிட்ட உலகம். விரல் தேய்ப்பில் விரிந்து கொடுக்கிறது. பட்டனைத் தட்டும் நேரம் கூட இன்றைய தலைமுறைக்கும் பாரமாகிவிட்டது. விற்பனைக்கு OLX. வாங்குவதற்கு அமேசன் வெப், மகம் பார்க்க Imo, Chat க்கு Whatsapp. வீட்டுக்கு Skype, வேகமாக முன்னேறும் தலைமுறைக்கு ஈடுகொடுக்க முடியாது மூச்சுத் திணறுகிறது மானிடம். பெருகிவிட்ட வசதிகள், அருகி விட்ட உறவுகள்! ஊடகங்களை பயனுறப் பயன் படுத்த இயன்றதைச்செய்வோம்! உறவுகளை வளர்க்க ஊடகங்களைப் பயன்படுத்துவோம்.

## புறம் கூறல்



ஒருமுறை சாக்ரடீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றிப் புகார் கூற முயன்றார். உடனே சாக்ரடீஸ் அவரிடம்

“என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் மூன்று கேள்விகளைக் கேட்பேன். மூன்று கேள்விகளுக்கும் “ஆம்” எனப் பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றிக் கூறலாம்” என்றர்.

முதல் கேள்வி: “அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்து விட்டுத் தான் அவரைப் பற்றிக் கூறுகிறாயா?” என்று கேட்டார்.

“இல்லை” எனப் பதில் வந்தது.

இரண்டாவது : ‘அந்த நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் யாராவது பயனடைவார்களா?” என்றார்.

“இல்லை” எனப் பதில் வந்தது.

மூன்றாவது : “அவர் செய்த செயல் சமூகத்திற்குத் தீமையானதா?” என்று கேட்டார்

“இல்லை” எனப் பதில் வந்தது.

“யாருக்கும் பயனில்லாத, நல்ல விஷயமில்லாத, நேரடியாகப் பார்க்காத என் நண்பரைப் பற்றிய சம்பவத்தைத் தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்” என்றார்.

பிறரைப் பற்றிக் குறை கூறுபவர்கள், புறணி பேசுபவர்கள், புகார் தெரிவிப்பவர்கள்தான் முதலில் சந்தேகத்துக்குரியவர்கள்.




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(நாதன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: "இனித் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்" எனத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வநாயகம் ஒருதடவை குறிப்பிட்டார். இனிமேல், தமிழரசுக் கட்சியை யார் காப்பாற்றுவார்?**

பதில்: யாழ்ப்பாண நீதிமன்றமும் திருகோணமலை நீதிமன்றமும்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: கடந்த வாரம் தமிழரசுக் கட்சியை போட்டு வாங்கு வாங்கு என்று வாங்கியிருக்கின்றீர்கள்! ஏன்?**

**ப:** தமிழரசுக் கட்சியினரே தம் கட்சியை விற்பதனால் நானும் 'வாங்கு வாங்கு என்று வாங்கவேண்டி' வந்துவிட்டது, ஆனந்தன்! அவ்வளவுதான்.

*(சீலன், கனடா)*

**கே: கணவரால் தாக்கப்படும் சம்பவங்கள்தான் இதுவரையில் நாம் அதிகமாகக் கேள்விப்பட்டவை. ஆனால் இப்போது, மனைவியர் கணவர்களைத் தாக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது எதனைக் காட்டுகின்றது?**

**ப:** சீலன், ஒரு தாக்கத்துக்கு எதிர்த்தாக்கம் உண்டு என்பதை இதுவரை காலமும் தாக்கப்பட்டு வந்த பகுதியினர் உணர்ந்துவிட்டார்கள் என்பதைத்தான், உங்கள் கேள்வியும் மேற்குறிப்பிட்ட சம்பவமும் தெளிவுபடுத்துகின்றது. எதற்கும் தற்காப்புக் கலையைப் பழகி வைத்திருப்பது உங்கள் உயிரைக் காப்பாற்ற எப்போதாவது உதவும் சீலன். மேற்சொன்ன விடயத்தை உறுதிப்படுத்துவதுபோல 'மனைவியால் தாக்கப்பட்டோர் சங்கம் அகில இலங்கை' என்ற ஒரு விண்ணப்பப் படிவத்தை அண்மையில் படிக்க நேர்ந்தது. அது, பதிவுசெய்யப்பட்ட சங்கங்களில் ஒன்றாக அதன் பதிவெண்ணும் கொடுக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கு நூறு வீதம் இது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று உறுதிப்படுத்த முடியவில்லை! இச்சங்கத்தில் அங்கத்தவர்களைச்சேர்த்து வருகின்றார்கள் என்றும் தெரிகின்றது. இச்சங்கத்தில் இணைந்து கொண்டால் மனைவியால் எதிர்தாக்கத்திற்கும் தாக்குதலுக்கும் உட்பட்டவர்கள் தமது சேதாரங்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறப்படுகின்றது! யோசித்து முடிவெடுங்க சீலன் அல்லது மேற்சொன்ன சங்கத்தில் தொடர்பு வைப்பதற்கே உங்களுக்கு நிறையச் சேதாரம் ஏற்பட்டுவிடும்!

(வரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: 'என் கேள்விக்கென்ன பதில்' என்ற இப்பகுதியில் அரசியல் சம்மந்தமான கேள்விகளுக்கெல்லாம் அதிகம் பதிலளிக்கின்றீர்கள். உங்களுக்கும் அரசியல் நன்றாகத் தெரியுமா?**

**ப:** 'கொஞ்சங் கொஞ்சங் தெறியும்!'

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: கடமைகளைச் செய்து நேர்மையாகவும் நேர்த்தியாகவும் நடந் தால் இல்லாதது பொல்லாதது எல்லாம்கூறி இருந்த இடம் தெரியாமல் ஆக்கப் பார்க்கின்றார்கள். ஏன் மக்களின் மனநிலை இப்படி இருக்கின்றது?**

**ப:** பொதுவாக, சில வேளைகளில் ஆழ்ந்து சிந்தித்தால் எமது மக்களின் மனநிலை கொஞ்சம் விசித்திரமானதுதான் என்ற முடிவுக்கே வந்துவிடுவீர்கள்! பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட ஈழத்து வாழ்வும் வளமும் என்ற நூலில் ஒரு குறிப்பை அண்மையில் படிக்க நேர்ந்தது. அதில், பேராசிரியர் குறிப்பிடுவார்: "அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை அரசாண்ட ஒல்லாந்தத் தலைவன் ஒருவன் யாழ்ப்பாணத்தைப் பற்றிக் கூறியது கவர்ச்சிகரமானது." என்று கூறிவிட்டு அத்தலைவன் கூறியதை மேற்கோளாகத் தருகின்றார் இப்பேராசிரியர்: "யாழ்ப்பாண அரசில் வாழுவோர் கர்வமும் மமதையும் கொண்ட பிடிவாதக் குணமுள்ள முட்டாள்கள். இடங்கண்டால் தமக்கு மேலான உத்தியோகத்தர் மீது மேலதிகாரிகளுக்குப் பொய்க் குற்றம் சாட்டுவார்கள், ஆனால் அவ்வுத்தியோகத்தர் கடுமையாய் இருந்து இடங் கொடாது நடந்தால் அவருக்குப் பல்லுக் காட்டி அவர் காலிற் போய் விழுவர்." யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்ல தமிழர்களாகிய நம்மில் பலருக்குப் பொருந்தும் என நினைக்கின்றேன்!

(அருள், யாழ்ப்பாணம்)

**கே: மக்களின் நியாயமான கோரிக்கைகள் கேட்கப்படுவதாய்த் தெரியவில்லை! குறிப்பாக, அரசு மக்களின் கஸ்ரங்களை உணர்வதாகத் தெரியவில்லை. தன் பலத்தைத்தான் பல இடங்களிலே காட்டுகின்றது. தேர்தலும் வரப்போகின்றது. இந்நிலையில் மேற்சொன்ன பிரச்சினைகளை நீக்க வேண்டுமானால் வழியென்ன?**

**ப:** அருள், செல்வந்தர்கள் ஏழைகளிடம் திருடும்போது அது வியாபாரம் எனப்படுகின்றது. இத்திருட்டை அரசு செய்கின்றபோது வரி எனப்படுகின்றது. இந்த இரண்டு திருடர்களுக்கும் எதிராக ஏழைமக்கள் போராடினால் அது வன்முறை என அழைக்கப்படுகின்றது என்கின்றார் மார்க் ட்வைன். மக்களை முதன்மைப்படுத்தி வாழும், மக்களை நேசிக்கும், மக்கள் தலைவர்களை உருவாக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை ஆட்சியில் மக்கள் அமர்த்தவேண்டும். அதனைவிடுத்துக் கட்டாக்காலிகளை அனுமதித்தால் கஸ்ரகாலம் தான் தொடரும்!

# தமிழ்க் கிறிஸ்தவ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவ விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, ஓய்வு நிலைப் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, அமலமரித் தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் அருட்தந்தை செ. போல் ஜெயந்தன் பச்சேக், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நூல்களுக்கான ஆய்வுரைகளை முறையே ஆசிரிய ஆலோசகரான திரு. ஜோண்சன் ராஜ்குமார் அவர்களும், யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் மே நாள் விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் அவர்களும் நிகழ்த்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரி யர் அருட்தந்தை யோ.கி. போல் றோகான் அவர்கள் நூல்களின் வெளியீட்டை தலைமை தாங்கி நிகழ்த்தினார். பிரதிகளை நூல்களின் ஆசிரியர் பிரதம, சிறப்பு மற்றும் கௌரவ விருந்தினர்களுக்கு வழங்கி வைத்தார். நூல்களின் ஆசிரியர் மேரி வினிபிரிடா சந்திரசேகர் அவர்களின் ஏற்புரையை அடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் அருட்தந்தை ம.வி.இ. இரவிச்சந்திரன் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது. நிகழ்வுத் தொகுப்பை யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. இ.அ. அமலரத்தினம் அவர்கள் திறம்பட ஆற்றினார். யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அருட்தந்தையர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வு மாலை 6.30 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

# அருட்தந்தை ம.த.சறத்ஜீவன் அடிகளாரின் 15ம் ஆண்டு நினைவு



மே 18ம் திகதி 2009ம் ஆண்டு தமிழ் மக்கள் எம் வரலாற்றில் மறந்திட முடியாதது. இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து சோர்ந்துபோய், இது போதாதென்று ஒவ்வொன்றாகக் குடும்ப உறவுகளை இழந்து வேதனையோடும், கண்ணீரோடும், பயத்தோடும் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள். நினைத்துப் பார்க்க முடியாத மரண ஓலம் ஒலித்துக் கொண்டேயிருந்தது. குண்டு வீச்சின் கொடுமை வானைக் கிழித்துக்கொண்டு பூமியைத் தொடும் வேளையில் ஒன்றாய், பத் தாய், நூறாய், ஆயிரமாய், இலட்சமாய் அங்கவீனத்திற்குள்ளும், அவலச் சாவுக்குள்ளும் மக்கள் கொத்துக் கொத்தாய் மண்ணுக்குள்ளே புதைந்து போனார்கள். பசிக்குது அம்மா என்று பச்சிளம் குழந்தைகள் பசிக் கொடுமையால் தவிக்க, கொடுக்க எதுவுமே இல்லாமல் தாய்மார்கள் துடிக்க, ஏதாவது கிடைக்குமா என்று தந்தைமார் வெளியே செல்ல, குண்டுகள் சாரமாரியாய் நிலத்தை நிறைக்க குருதிக் கடலிலே தத்தளித்துக் கொண்டிருந்தது மனிதம்.

இது நிதர்சனமாகிவிட மக்கள் பணியில் தம்மை இணைத்த குருக்கள், துறவிகள் மக்களோடு பயணித்தார்கள். புண்பட்ட மக்களுக்கு ஆறுதலாக, இழப்போடு துணிவாக, சாவோடு நல்ல உதாரணமாகக் குருக்கள் பணியாற்றினார்கள் என்பது உண்மை. அருட்தந்தை சறா ஒரு விசித்திரப் பிறவி. மக்கள் பணி என்பது அவர் மூச்சாகிவிட, தன்னை இயேசுவின் மகத்தான பணியிலே அர்ப்பணிக்க முன்வந்த கணப்பொழுதே தான் சார்ந்த இனத்திற்காகத் தன் வாழ்நாளைக் கொடுக்கத் துணிந்து நின்றமை அவர் சாவின் யதார்த்தமானது.

பள்ளிப் பருவம் முதலே சாரணியர் குழுமத்திலே இணைந்து மக்களுக்கு உதவி புரியும் நல் மகத்துவத்தைப் பெற்றுக் கொண்டார். அவரின் தியாக வாழ்வின் வாய்க்காலாக அவர் பெற்றோர், சகோதர, சகோதரிகள் துணை நின்றமை பெருமைக்குரியது.

பல திறமைகள் அவருக்குள்ளே இருந்தன. அத்தனை ஆற்றல்களையும் மற்றவர்களுக்காக மகத்தாகச் செய்ய வேண்டும் என்ற தணியாத தாகம் அவரில் எப்போதுமே நிறைந்திருந்தது. யாரையும் நோகப்படுத்தமாட்டார். உண்மை மட்டுமே பேச வேண்டும் என்பது அவருடைய நியதி அதனால் அவர் வாழ்வு என்னும் அகராதியிலே 'பொய்' என்ற சொல்லே கிடையாது. தானும் மகிழ்ந்து அதே மகிழ்ச்சியை அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்னும் சிறப்பு அவருக்கே உரியதாகியது. மிகவும் பொறுமை காப்பார். ஆனால் அநீதியைக் கண்டு அமைதி கொள்ள மாட்டார். நீதியை நிலைநாட்ட எதையும் செய்யும் துணிவு அவருக்குள்ளே தாராளமாக இருந்தது.

மே மாதம் 13ம் திகதி பிறந்து, மே மாதம் 14ம் திகதி குருத்துவ அருட்பொழிவு பெற்று, அதே மே மாதம் 18ம் திகதி இயேசுவுக்காகத் தன் உயிரைக் கொடுத்தார் அருட்தந்தை சறா.

**உண்மைக்குச் சான்று பகர்ந்த சறாவின் நினைவுகள்**
**வாழ்ந்துகொண்டேயிருக்கும்.**
**நீதியோடு சங்கமித்த சறாவின் எண்ணங்கள் எழுந்து நிற்கும்.**
**நேர்மையாக வாழ்ந்த சறாவின் உணர்வுகள் நிலைத்து எழும்**
**அன்பைப் போதித்த சறாவின் சரித்திரம் என்றும் மறையாது...**

அருட்தந்தை பாலதாஸ் பிறையன்

## பிரித்தானியா வால்சிங்கம் மாதா.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

வோல்சிங்கம் மாதா திருத்தல திருநாள் திருப்பலியில் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர். பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் மக்களின் பிரசித்தி பெற்ற மரி அன்னையின் திருத்தலமாகிய வால்சிங்கம் மாதா திருத்தல திருநாள் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது. பிரித்தானியாவின் எல்லா பகுதிகளிலும் இருந்தும் வந்திருந்த கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்து மத மக்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி விழாவில் கலந்து கொண்டார்கள். இத்திருப்பலியில் மறையுரை ஆற்றிய யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், யாழ்ப்பாணம் மன்னார் மறை மாவட்டத்தில் மருதமடு அன்னை பயணம் செய்த பொழுது ஆன்மீக ரீதியாக இணையத்தளங்கள் வழியாகவும் ஜெபங்கள் வழியாகவும் இணைந்து இருந்த பிரித்தானியாவில் வாழும் மக்களுக்கு நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தார். மருதமடு அன்னை உங்களையும் உங்கள் வீதிகளில் வலம் வந்து சந்திக்கின்றார் என்ற விசுவாச உண்மையையும் அவர்களுக்கு உணர்த்தி, மருத மடு அன்னைதான் வால்சிங்கம் அன்னையாக இப்பதியில் வீற்றிருந்து அற்புதங்கள் புரிகின்றார் என்பதை யும் ஞாபகப்படுத்தினார். பிரித்தானிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை எல்மோ அருள்நேசன் அடிகளாரால் திருவிழா மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.

## விண்ணகப் பிறப்பின் 31ஆம் நாள் நினைவு

மண்ணில் 20 . 03 . 1930



விண்ணில் 24 . 04 . 2024

**திருமதி சந்தானா இன்னேசம் செபஸ்ரியாம்பிள்ளை**

**( ஓய்வு நிலை ஆசிரியர், மண்டைதீவு - மாதகல் )**

" வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம் " (உரோ. 14:8)

எமது தாயாரின் இறப்புச் செய்தி அறிந்து நேரிலும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் எமது துயரில் பங்குகொண்டு ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபித்த மதிப்புக்குரிய யாழ். ஆயர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், நண்பர்கள், உறவினர்கள், அன்னாரின் பழைய மாணவர்கள், அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

24.05.2024 வெள்ளிக்கிழமை காலை 07.00 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்திலும், 25.05.2024 சனிக்கிழமை காலை 06.00மணிக்கு மண்டைதீவு புனித இராயப்பர் ஆலயத்திலும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*நீடிய வாழ்வினால் நிறைவளித்த இறைவா! நிலைவாழ்வின் பெருமகிழ்விலும் இவர் ஆன்மாவுக்கு நிறைவளித்தருளும்.*

மாதகல்

செப உதவியை வேண்டி நிற்கும்
பிள்ளைகள்

# தமிழ்க் கிறிஸ்தவ அறிவியல் பரப்பிற்கு இரண்டு புதிய நூல்களின் வரவு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் முதுநிலை விரிவுரையாளரான மேரி வினிபிரிடா சந்திரசேகர் அவர்களின் "ஞானப்பள்ளு: இலக்கியம் - இறையியல் - வரலாறு" மற்றும் "திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சிற்ப, கட்டடக் கலைகள்" ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த 07.05.2024 மாலை 4.00 மணிக்கு அகவொளி மண்டபத்தில் சிறப்புற நடந்தேறியது.இந்நிகழ்வு யாழ்ப்பாண மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறை ஆகியவற்றால் இணைந்து ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக் குழுவின் இயக்குநர் அருட்தந்தை யோ. யோண் மவுலிஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினாக தென்னிந்தியதிரு அவையின் மேநாள் பேராயர் ஜெபநேசன் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அவர்களும், (7ம் பக்.)

# மாங்குளம் புனித அக்னேசம்மாள் ஆலயத் திறப்பு விழா



மாங்குளம் புனித அக்னேசம்மாள் ஆலய கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் புதிய ஆலயத் திறப்பு விழா கடந்த 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை மரியதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்துத் திருப்பலி ஒப்புக் கொடுத்தார்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்து கொண்டனர். அத்துடன் மருதமடு அன்னையின் திருச்சொருபம் புனித அக்னேசம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டதன் நினைவாக 29ஆம் திகதி திங்கட்கிழமை இவ்வாலயம் யாத்திரைத்தலமாகப் பிரகடனம் செய்துவைக்கப்பட்ட கல்வெட்டை யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

# இளவாலைப் பிரதேசத்தில் திருமறைக்கலாமன்றத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வு



திருமறைக்காலமன்றம் இளவாலைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதன் 25ஆம் ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வு கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இளவாலை திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலைக்களரியில் நடைபெற்றது. மன்ற இணைப்பாளர் திரு. பியன்வெனு அவர்களின் தலைமையில் திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்தந்தை அமிர்த ஜெயசேகரம் அவர்களின் வாழ்த்துரையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் இந்நாளை சிறப்பிக்கும் கலைநிகழ்வுகளும் கலைஞர்களுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக சேர். பொன் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடப் பீடாதிபதி திரு. சிவரூபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# நற்கருணைநாதர் சபைக்குப் புதிய குரு



இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தை சேர்ந்தவரும் நற்கருணைநாதர் சபைத் திருத்தொண்டருமான சபாரட்ணம் சன்ரனா அவர்களின் குருத்துவ திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு கடந்த மாதம் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியிலேயே திருத்தொண்டர் சபாரட்ணம் சன்ரனா அவர்கள் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் பணிவாழ்வில் அர்ப்பணிப்புடன் நிலைத்திருந்து இறை பணியாற்ற வாழ்த்தி நிற்கின்றோம்.

# இலங்கைத் தேசிய கத்தோலிக்க குடும்ப அப்போஸ்தலிக்க ஆணைக்குழுவின் வருடாந்த ஒன்றுகூடல்

இலங்கைத் தேசிய கத்தோலிக்க குடும்ப அப்போஸ்தலிக்க ஆணைக்குழுவின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 25, 26ஆம் திகதிகளில் கண்டி மொண்டோபானோ தியான இல்லத்தில் நடைபெற்றது.

தேசிய ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜிகான் பெர்னாண்டோ அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஆணைக்குழுவிற்குப் பொறுப்பான ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல், சிறப்பு திருப்பலி, அனுபவப் பகிர்வு என்பன நடைபெற்றன.

அத்துடன் கொழும்பு மறைமாவட்டத்தில் நடைமுறையிலுள்ள திருமண முன்னாயத்தப் படிவம், திருமண சீரமைப்புப் படிவம் மற்றும் திருமண சான்றிதழ் என்பவை பங்கு பற்றியவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

# பற்றிமா அன்னை ஆலயத்திற்கு புதிய தேர்



இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலயம் கட்டப்பட்டதன் 50ஆம் ஆண்டு நிறைவாக அமைக்கப்பட்ட அன்னையின் புதிய தேர்ப்பவனி கடந்த 06ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை டெனிசியஸ் அவர்களின் ஒழுங்குப்படுத்தலில் ஆலய வருடாந்த நவநாட்களின் ஆரம்ப நிகழ்வாக இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்கள் கலந்து 18அடி உயரத்தில் அமைக்கப்பட்ட அன்னையின் புதிய தேரை ஆசீர்வதித்தார். தொடர்ந்து அன்னையின் தேர்ப்பவனி நடைபெற்றதுடன் இந்நிகழ்வில் பங்குமக்கள் பக்தியுடன் பங்குபற்றினர்.




# இளையோரால் இரத்ததான நிகழ்வு





தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பாசையூர் பங்கின் வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப் பட்ட இரத்ததான முகாம் கடந்த 1ஆம் திகதி புதன் கிழமை ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பங்குத் தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் 22 வரையான குருதிக் கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கினார்கள்.

குருநகர் ஜேம்ஸ் வோரியர்ஸ் இளையோர் சமூக முன்னேற்ற கழகத்தின் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கழக தலைவர் திரு. இயல் றொன்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன் 100 வரையான குருதிக்கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கியிருந்தார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.